**செ.வெ.எண்: 68** **நாள்: 31.01.2018**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (31.01.2018) நடைபெற்றது.

இந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பயிர் பாதுகாப்பு மருந்துகளை பாதுகாப்பாக தெளித்தல் தொடர்பாக விவசாயிகள் நலன் குறித்த கையேட்டினை வெளியிட்டு பின்னர் பேசுகையில் தெரிவித்ததாவது:

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் மரக்கன்றுகளுக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம் வழங்க கோரியும், வறட்சி நிவாரணம் வழங்க கோரியும், கிணறுகளை ஆழப்படுத்த கோரியும், பவர்டில்லர் மானியத்தில் வழங்க கோரியும் என விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற 64 கோரிக்கை மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழையளவு 805.6 மி.மீ ஆகும். இதுவரை பெறப்பட்ட மழையளவு 4.12 மி.மீ ஆகும். 2018 ஜனவரி மாதத்தில் பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 12.60 மி.மீக்கு இது வரை பெறப்பட்ட மழையளவு 4.12 மி.மீ ஆகும்.

2017-18 நடப்பாண்டில் நெல் 84901 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 2587 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 3984 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 7604 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 2556 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9682 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 82.636 மெ.டன் நெல் விதைகளும், 30.736 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 31.9400 மெ.டன், சிறுதானியங்கள் 1.156 மெ.டன் விதைகளும் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விதை விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் வழங்கிட தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 1673.95 மெ.டன்னும், டிஏபி 976.90 மெ.டன்னும், பொட்டாஷ் 686.00 மெ.டன்னும், காம்ப்ளக்ஸ் 2720.00 மெ.டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசனத்திட்டத்தில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி கூடுதல் பரப்பில் சாகுபடி செய்திடும் பொருட்டு வேளாண் பயிர்களான கரும்பு, மக்காச்சோளம், எண்ணெய், பனை மற்றும் தென்னை மரங்களுக்கு சொட்டு நீர் பாசனமும், பயறு வகை பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கு தெளிப்பு நீர் பாசனமும் மற்றும் மழை தூவான் பாசன கருவிகளும் சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும் இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் அமைத்துக் கொடுக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு நுண்ணீர் பாசனத் திட்டத்தில் பங்கு பெற்று பயன் அடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

சிறு/குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூட்டுப் பண்ணையம் முறையினைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் முன்னுரிமை அடிப்படையில் கிராமங்கள்

மற்றும் கிராம வாரியான சிறு/குறு விசாயிகளின் பட்டியலைத் தேர்ந்தெடுத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்/தோட்டக்கலை உதவி இயக்குநர் தலைமையிலான குழு பயிர் வாரியான உழவர் ஆர்வலர் குழு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு அமைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கினை 485 உழவர் ஆர்வலர் குழுக்கள்/97 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், வட்டார வாரியாக சிறு/குறு விவசாயிகளின் எண்ணிக்கை அடிப்படையில் அமைக்கப்பட வேண்டிய பயிர் ஆர்வலர் குழு/பயிர் உற்பத்தியாளர் குழு இலக்குகள் 17.07.2017 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் ஒப்புதல் பெற்றுப் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.

வட்டார கூட்டு பண்ணையக் குழு மற்றும் மாவட்ட குழு ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலுடன் அமைக்கப்பட்டுள்ளன. வட்டார அளவில் உழவர் ஆர்வலர் குழு அமைக்கும் பணி நிறைவு பெற்று குழுவில் தலைவர், செயலாளர், பொருளாளர் தேர்வு நடைபெற்று தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் குழு பெயரில் வங்கிக் கணக்கு துவங்கப்பட்டு ரூ.500+ரூ.100 வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது 5 உழவர் ஆர்வலர் குழுக்களை ஒருங்கிணைத்து ஒரு உழவர் உற்பத்தியாளர் குழு என்ற அளவில் 435 குழுக்களை ஒருங்கிணைத்து 87 உழவர் உற்பத்தியாளர் குழு அமைக்கும் பணி நடைபெற்று முடிவுற்ற நிலையில் இவ் உழவர் உற்பத்தியாளர் குழுவில் (5 உழவர் ஆர்வலர் குழுக்களில் உள்ள தலைவர், செயலாளர், பொருளாளர்) ஆகியோர் இணைந்து ஒரு தலைவர், செயலாளர், பொருளாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கம் திட்டத்தின் கீழ் மண்வள அட்டைகள் வழங்கும் திட்டத்தின்படி 2017-18 ஆம் ஆண்டிற்கு புதுக்கோட்டை மாவட்ட விவசாயக் குடும்பங்கள் அனைத்திற்கும் வழங்கிடும் பொருட்டு கிரிட் மாதிரிகள் எடுக்கும் முறை மூலம் 19250 மண் மாதிரிகள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 19273 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு குடுமியான்மலை மண்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுவரை 19273 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வு முடிவுகளின்படி மண்வள அட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. உருவாக்கப்பட்ட மண்வள அட்டைகள் 2017-18 ஆம் ஆண்டிற்கு சுமார் 173894 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் கீழ் பணிபுரியும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரியின் பயிர்காப்பீட்டுத்திட்டத்தின்கீழ் நடப்பு 2017-18 ஆம் ஆண்டு ரபி பருவத்திற்கு நெல் (நவரை) மக்காசோளம், உளுந்து, நிலக்கடலை, கரும்பு ஆகிய பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. காப்பீடு செய்வதற்கு இறுதி நாள் 15.02.2018 ஆகும். ஆகவே விவசாயிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு தங்கள் வருவாய் கிராமம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் அறிந்து பயிர் காப்பீடு செய்யவும். விவசாயிகள் தங்கள் அருகாமையில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திலோ / தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ / பொது சேவை மையங்களிலோ பிரிமியத் தொகையுடன் ஆதார் எண், வங்கி கணக்கு புத்தக எண், நிலம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் சாகுபடி சான்று ஆகியவற்றை சமர்ப்பித்து பயர்காப்பீட்டுத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனவே தமிழக அரசின் வேளாண் திட்டங்களை விவசாயிகள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் செல்வி.கெ.எம்.சரயு.இ.ஆ.ப., திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.மனோகரன் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**